**செய்தி வெளியீடு : 1037** **27.11.2008**

# தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று (27.11.2008) தலைமைச்செயலகத்தில் தமிழக அமைச்சரவையின் 33–வது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன:–

1. நேற்றையதினம் இரவு மும்பய் நகரத்தில் தீவிரவாதிகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக இதுவரை வந்துள்ள செய்தியின்படி நூற்றுக்கு மேற் பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றும், காயம்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஆயிரத்தை எட்டும் என்றும் தெரிகிறது. அதற்காகவும், கடந்த ஒரு வார காலமாக தமிழகத்தில் பெய்கின்ற அடைமழையின் காரணமாக இதுவரையில் 50க்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதற்காகவும் இந்த அமைச்சரவைக் கூட்டம் தன்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது என்ற தீர்மானத்தை முதலமைச்சர் கலைஞர் முன் மொழிந்தார். அந்தத் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அதனை அறிவுறுத்தும் வகையில் அமைச்சர்கள் ஒரு நிமிடம் எழுந்து நின்று அமைதியாக மௌனம் கடைப்பிடித்தனர்.

2. தமிழகத்திலே தொடர்ந்து பெய்து வரும் பெருமழை குறித்து அமைச்சரவையில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இதுவரை அரசுக்கு வந்துள்ள செய்தியின்படி 55 வட்டங்கள், குறிப்பாக 1380 வருவாய்க் கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், 1 லட்சத்து 35 ஆயிரத்து 94 பேர் மழை காரணமாக பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர் என்றும், 54 ஆயிரத்து 525 பேர் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்றும், 51 பேர் உயிரிழந் துள்ளார்கள் என்றும், 68 கால்நடைகள் இறந்துள்ளன என்றும், முழுவதுமாக 930 குடிசைகளும், பகுதியாக 1905 குடிசைகளும் சேதமடைந்துள்ளதாக இதுவரை வந்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன என்று தலைமைச் செயலாளர் அமைச்சரவையில் விளக்கினார்.

   மேலும் நிவாரணங்கள் வழங்குவதற்காக 242 மையங்கள் திறக்கப் பட்டுள்ளதாகவும், அங்கே 48 ஆயிரத்து 805 பேர் பாதிப்புக்கு உள்ளானவர்கள் இருக்கிறார்கள் என்றும், இதுவரை 1 லட்சத்து 5 ஆயிரத்து 149 உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் சாலைகளும் பெருவாரியாக பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தலைமைச் செயலாளர் விளக்கினார்.

   இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, பெருமழையிலே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தமிழக அரசின் சார்பில் முதற்கட்டமாக 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அறிவித்தார்.

   பகுதியாக பாதிக்கப்பட்ட மற்றும் முழுவதுமாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு தலா இரண்டாயிரம் ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கப்படும் என்றும் இந்த மழையின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிதி உதவி அளிக்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

வெள்ளப் பகுதிகளுக்கு விரைந்து சென்று நிவாரணப் பணிகளை அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் – அதிக அளவில் பாதிக்கப்பட்ட திருவாரூர், நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க. ஸ்டாலினும் – திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகனும், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங் களுக்கு வருவாய்த் துறை அமைச்சர் ஐ. பெரியசாமியும் செல்வது என்றும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டது.

3. அடுத்து, அமைச்சரவையில் அருந்ததியருக்கான சிறப்பு இட ஒதுக்கீடு குறித்தும், நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் அளித்த அறிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டது. நீதியரசர் ஜனார்த்தனம் அவர்கள் அமைச்சரவை கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு, அவர் விரிவாக இந்தப் பொருள் குறித்து அமைச்சரவையில் விளக்கினார். தற்போது தமிழகத்தில் ஆதி திராவிடர்கள் அனைவருக்கும் சேர்த்து கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில்; ஆதி திராவிடர்களுள் கடைநிலையில் உள்ள அருந்ததியர்க்கு உள் ஒதுக்கீடு வழங்குவது குறித்த நீதியரசர் எம்.எஸ். ஜனார்த்தனம் அவர்களது விரிவான அறிக்கையினைப் பரிசீலனை செய்த அமைச்சரவை – ஆதி திராவிடர்கள் அனைவருக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் 18 சதவிகித இட ஒதுக்கீட்டில்; அருந்ததியர் என்கின்ற சமுதாயத் தொகுப்பின்கீழ் இடம் பெற்றுள்ள அருந்ததியர், சக்கிலியர், மாதாரி, ஆதி ஆந்திரர், பகடை, மடிகா, மற்றும் தோட்டி ஆகிய பிரிவினரை உள்ளடக்கி மூன்று சதவிகித இட ஒதுக்கீடு வழங்கலாம் என்ற பரிந்துரையை கொள்கை அடிப்படையில் ஏற்றுக் கொள்வதென்றும்; அந்த இட ஒதுக்கீட்டின் செயலாக்கம் குறித்து அமைச்சரவை குழு ஒன்றினை அமைத்து ஆய்வு செய்வதென்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பொதுப்பணித் துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் – “பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமுதாயங்களுக்காக உழைப்பதையே தன் வாழ்நாள் இலட்சியம் என்ற குறிக்கோளுடன் எப்பொழுதெல்லாம் தலைவர் கலைஞர் முதல் அமைச்சராக வருகிறாரோ அப்போதெல்லாம் இந்தச் சமுதாயங்களின் மேன்மைக்காக பல்வேறு திட்டங்களையும் சலுகைகளையும் அளித்து வரும் முதலமைச்சர் கலைஞர், தற்போது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் அடி மட்டத்திலே உள்ள அருந்ததியருக்கான உயர்விலே அக்கறை செலுத்தி, அதற்காகவே ஒரு கமிஷனை அமைத்து, அறிக்கை பெற்று அதனை அமல்படுத்தவும் முன் வந்திருப்பதற்காக இந்த அமைச்சரவை முதல் அமைச்சர் அவர்களுக்கு பாராட்டினையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. அதுபோலவே இந்தக் குழுவிலே இடம் பெற்று விரைவில் அறிக்கையைக் கொடுத்த நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறது’ என்றும் முன்மொழிந்த தீர்மானத்தை அமைச்சரவை கரவொலி எழுப்பி ஏற்றுக்கொண்டது. நீதியரசர் ஜனார்த்தனம் அவர்களும் தனக்கு இந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய முதலமைச்சருக்கு நன்றி கூறினார்.

*********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.